ஸ்ரீ சம்மந்த விநாயகர் துணை ஸ்ரீ அகோரமூர்த்தயே நம ஸ்ரீ நடராஜர் துணை ஸ்ரீ புதபகவான் துணை


உ
ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ குருப்யோ நம : ஸ்ரீ வேதவ்யாசாய நம :












# திருவெண்காடு ஸுப்ரமண்ய கனபாடிகள் வேதபாராயண ரிலிஜியஸ் டிரஸ்ட் (பதிவு)

"வேதபவன்" பிளாட் நெ.31, டோர் நெ.14, விவேகானந்தா தெரு,
நிலமங்கை நகர், ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
Cell : 9444627954, 9962570773. Email: tsgchandran@gmail.com, Web : www.tsgv org

திருவெண்காடு – புதன் ஸ்தலம் ஸ்ரீ பிரும்ம வித்யாம்பிகா ஸமேத ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர்,
ஸ்ரீ அகோரமூர்த்தி, ஸ்ரீ சிவகாமி சுந்தரி ஸமேத, ஸ்ரீ நடராஜர் – இந்திர மகோத்ஸவம்
நடைபெறும் காலத்தை முன்னிட்டும், உலக நன்மையை வேண்டியும்

## திருவெண்காடு ஸுப்ரமண்ய கனபாடிகள் வேதபாராயண அறக்கட்டளை நடத்தும்



88-ம் ஆண்டு சதுர் வேதபாராயணம், ஸ்ரீ மஹாருத்ர யக்ஞம்,
விசேஷ ஹோமங்கள் மற்றும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண நவாஹம்,
ஸீதா கல்யாணம், ஸீதா ராம ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்,
ஸம்பிரதாய நாம சங்கீர்த்தனங்கள்,
உபன்யாஸங்கள் கூடிய யக்ஞ பத்திரிகை









**88-ம் ஆண்டு நடைபெறும் இடம் : அயோத்தி**
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்,
(Chhoti Chhavni Pramod Van Raja Rani Park Road)
அயோத்தி மற்றும் ஸ்ரீ ஹரிஹர் சேவா சதன் வைதேகி பவன்
(ஸ்ரீ சங்கர மடம் / ஜானகி காட் அருகில்) அயோத்தி-224 123

**நடைபெறும் நாள் விசுவாவசு வருஷம் மாசி மாதம் 16ம் தேதி
சனிக்கிழமை முதல் மாசி மாதம் 26-ம் தேதி
செவ்வாய்கிழமை வரை 28.2.2026 முதல் 10.3.2026 வரை**

**89ம் ஆண்டு 2027 திருவெண்காட்டில் நடைபெறும்**

ஸ்ரீ பகவானை உபாஸிக்க மிகச் சிறந்ததும், ஸ்ரீ பகவத் ஸங்கல்பமாகவும், ஸ்ரீமத் பகவத்ஸ்வரூபமாகவும் விளங்குவது மறை என்று போற்றப்படும் நமது வேதம். இதிகாசங்கள் இது பல பிரிவினைகளை உடையது. லோக க்ஷேமார்த்தமாகவும், திருவெண்காடு இந்திர மஹோத்ஸவத்தை முன்னிட்டும், இந்த வேதபாராயணம் தொன்றுதொட்டு 87 வருஷங்களாக நடந்து வருவது உயர்ந்த தர்மமாகும். ஸ்வர்க்கவாசி திருவெண்காடு ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரமண்ய கனபாடிகள் நடத்தி வந்த இந்த வேதபாராயணம், மஹாருத்ரம், மற்றும் பற்பல விசேஷ ஹோமங்கள், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் ராமாயணம், மஹான்களின் உபன்யாஸம் போன்ற வைபவங்கள், ப்ராம்ஹண ஸமாராதனை, அன்னதானத்துடன் 11 நாட்கள் காசி முதல் ராமேஸ்வரம் வரை நடந்து வருகிறது யாவரும் அறிந்ததே. ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள் 100 வருடங்களுக்கு மேல் நடைபெறும் என்று அருளிய வாக்கும் மற்றும் இந்த 88 வது வருஷம் ஸ்ரீ பிரம்ம வித்யாம்பிகை ஸமேத ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர், ஸ்ரீ அகோரமூர்த்தி க்ருபையாலும், ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்னஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்திர ஸ்வாமி கிருபையாலும், ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூர்ண அனுக்ரஹத்துடன், பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் (ஸ்ரீ அண்ணா அவர்கள்), குருஜி ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அனுக்கிரஹத்துடன் ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி ஸ்வாமிகள் மற்றும் ஸ்தாபகர் திருவெண்காடு ஸுப்ரமண்ய கனபாடிகள் பரிபூரண ஆசீர்வாதத்துடன், வேத வித்வான்கள் மற்றும் சிவாசார்யார்கள் ஆசீர்வாதங்களுடன் மங்களகரமான விசுவாவசு வருஷம் மாசி மாதம் 16ம் தேதி முதல் மாசி மாதம் 26ம் தேதி சனிக்கிழமை வரை 28.2.2026 முதல் 10.3.2026 வரை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம் மற்றும் ஸ்ரீ ஹரிஹர் சேவா சதன் - வைதேகி பவன் (ஜானகி காட்) அருகில் அயோத்தியில் சதுர்வேத பாராயணம், மஹாருத்ரம், விசேஷமான ஹோமங்கள் மற்றும் ஸ்ரீமத் ராமாயணம், ஸீதா கல்யாணம், ஸ்ரீமத் ராமாயண சாம்ராஜ்ய பட்டாபிஷேகம், ஸ்ரீ ராம ஷடாக்ஷரி ஹோமம், இஷ்டி, ஸ்ரீ நாம சங்கீர்த்தனம் மற்றும் ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸம் மற்றும் பல வைபவங்கள் வெகு விமரிசையாக நடைபெற உள்ளன.

ஸ்ரீ வேத வேத்யனாக அவாப்த ஸமஸ்த காமனாக விளங்கும் ஸ்ரீய : பதியான பகவான் தர்மத்தை ஸ்தாபிக்க பல அவதாரங்கள் செய்திருக்கிறார். அதில் முக்கியமான அவதாரம் தான் சக்ரவர்த்தி திருமகனாக தோன்றிய ஸ்ரீராமாவதாரம். அதேபோல் நம் பாரதத்தில் அநேக இதிஹாஸ புராணங்கள் விளங்கினாலும் வால்மீகி அருளிச் செய்த ஸ்ரீமத் ராமாயணம் முக்கியமாக விளங்குகிறது. அதேபோல் புண்யபூமியான நமது பாரதத்தில் எல்லாமே திவ்ய தேசங்களாக விளங்கினாலும் மோக்ஷபுரிகளில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ அயோத்யாபுரி. ஸ்ரீ ராம ஜன்ம பூமியான அயோத்தியில் பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர்கள் செய்த மாபெரும் முயற்சியாலும் ஸ்ரீ பகவான் அவதரித்த அந்த மண்ணின் மஹத்துவத்தாலும் உலகமே வியக்கும் வகையில் அமைந்த மாபெரும் ஆலயத்தில் ப்ரகாசிக்கும் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் அனுக்ரஹத்தினால் நமது அறக்கட்டளை, வேதபாராயணங்கள் + இஷ்டிகள் + ஹோமங்கள் + ப்ராம்ஹண ஸமாராதனை + அன்னதானத்துடன் ஸ்ரீ ஸீதா ராம ஸாம்ராஜ்ய பட்டாபிஷேக வைபவமானது அதன் முறைப்படி கலச ஸ்தாபனம் + பூஜை + ஸஹஸ்ர நாம அர்ச்சனை + 24 பாகவதோத்தமர்களால் (ஸம்பூர்ணமாக) ஸ்ரீ வால்மீகி ராமாயண பாராயணம் + உபன்யாஸம் + பூர்த்தி தினத்தில் ஸ்ரீ ராம ஷடாக்ஷரி மஹா மந்த்ர ஹோமம் + மற்றும் நவாஹ விசேஷ ஹோமங்களுடன் ஸரயூ நதிக்கரையில் நடைபெற உள்ளது.

நமது டிரஸ்டில் அதிக பொருட்செலவுடன் நடத்தும் பெரிய நிகழ்ச்சியாக அமைகிறது. மேலும் அயோத்தியிலும் இத்தனை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும் ராமாயண நவாஹம் என்றும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ ராமர் ஆலயம் அமைந்தவுடன் ஸ்ரீ ராமரின் ஸங்கல்பத்தாலேயே இத்தனை நிகழ்ச்சிகளிலும் ஏற்பாடு ஆகி வருகிறது என்பது ஆச்சர்யமாகவும் ஸத்யமாகவும் உள்ளது.

**இப்பத்திரிகை கிடைத்த அனைத்து ஆஸ்திகர்கள் + ஸ்ரீராம பக்தர்கள் + வேத வித்துகள் + பாகவதர்கள் அவரவர்கள் முக்கிய பொறுப்பை ஏற்று பொருள் உதவி செய்து நமக்கு தெரிந்த அனைவரையும் இதில் கலந்து கொள்ளச் செய்து அவரவர்கள் சொந்த பொறுப்பில் அவசியம் அயோத்திக்கு வந்து இருந்து நடத்திக் கொடுத்து ஸ்ரீ ராமசந்த்ர ப்ரபுவை தரிசனம் செய்து ஸரயூ நதியில் ஸ்நானம் செய்து க்ருதார்த்தர்களாக வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.**

## நிகழ்ச்சி நிரல்

**ஸ்ரீ ஹரிஹர் சேவாசதன் வைதேகி பவன் மண்டபத்தில்**

**28.2.2026 முதல் 10.3.2026 நேரம் : விடியற்காலை 5.45 மணி முதல் 6.45 மணி வரை**

**குருவந்தனம், விசேஷ ஸ்ரீ கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம், ஸ்ரீ அகோராஸ்த்ர ஹோமம், ஸ்ரீ ராம சடாக்ஷரி ஹோமம் மற்றும் இதர ஹோமங்கள் (மஹான்களுக் கு ஆயுஷ்ய ஹோமம்)**

---

**28.2.2026 மட்டும்** காலை 6.00 மணிக்கு ஸ்ரீ கணபதி ஹோமம்

7.00 - 11.30 மணி மற்றும் ஸ்ரீ அகோராஸ்த்ர ஜெபம் மற்றும் ஹோமங்கள்

திருவெண்காடு சிவஸ்ரீ குரு என்கிற T.A. தட்சிணாமூர்த்தி சிவாச்சாரியர் தலைமையில்

11 தலைசிறந்த சிவாச்சார்யார்கள் கலந்து கொண்டு ஸ்ரீ அகோராஸ்த்ர ஹோமம் நடைபெறும்

---

**சதுர்வேத பாராயணம் :** காலை 8.00 மணி முதல் 11.30 மணி வரை

---

**மஹாருத்ரம்**

28.2.2026 முதல் 10.3.2026 - காலை 7.30 மணி முதல் 11.30 மணி வரை

10.3.2026 பூர்த்தி தினம் காலை 5.30 மணி முதல் 12.00 மணி வரை

**மஹாருத்ர ஜபம், ஹோமம், உபன்யாஸம், பூர்ணாஹுதி, தம்பதி பூஜை, மங்கள ஹாரத்தி**

---

**ஸ்ரீமத் ராமாயணம் - மூலபாராயணம் - உபயன்யாசம்**

01.3.2026 முதல் 9.3.2026 மூல பாரயணம் : 8.00 மணி முதல் 11.30 மணி வரை

உபன்யாஸம் : மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை

**( வேத வித்யாநிதி சேங்காளிபுரம் ப்ரஹ்ம்ம ஸ்ரீ சங்கர ராம தீக்ஷிதர் அவர்கள்)**

---

**சென்னை, மயிலை, ஸ்ரீ பிரகாஷ் கௌசிக் மற்றும் சிஷ்யர்களுடன் கீழ்கண்ட இடங்கள் / நாட்களில் பாராயணங்கள் நடைபெறும்**

6.3.2026 வெள்ளிக்கிழமை காலை அச்சித்ரா அஸ்வமேத பாராயணம் ஸ்ரீ காஞ்சி சங்கர மடம்

7.3.2026 சனிக்கிழமை காலை ருத்ரம் / சமகம் = கனபாராயணம் இடம் : மகா (அயோத்தி)

8.3.2026 ஞாயிற்றுக்கிழமை காலை சூரிய நமஸ்காரம் மற்றும் அருணப் பிரச்சனம் இடம் : ஸ்ரீ காஞ்சி சங்கர மடம்

---

**ஸ்ரீ விட்டல பஜன் மண்டலி - ஆதம்பாக்கம் சென்னை மூலம் நாம சங்கீர்தனம் - ஸீதா கல்யாணம் நடைபெறும்**

6.3.2026 வெள்ளிக்கிழமை மாலை 5 - இரவு 10 மணி சம்பிரதாய நாம சங்கீர்த்தனம் - திவ்ய நாமம் டோலோஸ்தவம்

7.3.2026 சனிக்கிழமை காலை 8.30 - 1.00 மணி வரை ஸீதா கல்யாண உத்ஸவம்

இடம் : ஸ்ரீ ஹரிஹர சேவா சதன் அயோத்தி

---

**யஜுர் வேத சாகையில் கல் வைத்த வாரம் என்கிற வேத பரீக்ஷை**

மிகவும் அபூர்வமான இந்த திருவெண்காடு ஸுப்ரமண்ய கனபாடிகள் சபா மூலம் நடத்தப்படும் யஜுர் வேத சாகையில் கல் வைத்த வாரம் என்கிற வேத பரீக்ஷை ஸ்தாபகர் தினமான மாசி மாதம் 24ம் தேதி 8.3.2026 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.00 மணி முதல் 6,00 மணி வரை நடைபெறும்.

---

**28.2.2026 முதல் 10.3.2026 வரை**

காலை 6.45 மணிக்கு குரு வந்தனம் 7.00 மணிக்கு ஸ்ரீ கணபதி ஹோமம், இதர ஹோமங்கள்

8.00 மணி முதல் 10.30 மணி வரை ருக்வேத புருஷ சூக்த ஹோமம் மற்றும்

பௌர்ணமாஸ்ய இஷ்டி 4.3.2026 புதன்கிழமை நடைபெறும். மேற்படி ஹோமங்கள் கும்பகோணம் ஸ்ரீ தினகர ஸர்மா தலைமையில் நடைபெறும்.

---

**சதுர்வேத பாராயணம் மற்றும் சிவ சகஸ்ரநாம பாராயணம். :**

மதியம் 3.30 மணி முதல் 5.30 மணி வரை

---

**அயோத்யா அருகில் உள்ள மகா** - என்கிற கிராமம் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி பல யாகங்களை அனுஷ்டித்த இடத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் உத்திரவுபடி வேதபாராயணங்கள், மற்றும் இதர நிகழ்ச்சிகள் அந்த யக்ஞ பூமியில் வேத வித்வான்கள் மற்றும் பாகவதர்களை 07.03.2026 சனிக்கிழமை மாலை அழைத்துக் கொண்டு, தரிசித்து பாராயணம் நாமசங்கீர்த்தனங்கள் நடைபெறும்.

**ஸ்ரீ அகோரமூர்த்திக்கு ஸ்ரீ அகோராஸ்த்ர ஹோமத்துடன் ருத்ராபிஷேகம் திருவெண்காட்டில்**

மாசி மாதம் 20ம் தேதி 4.3.2026 புதன் கிழமை பூரம் நக்ஷத்திரத்தில் 5ம் திருநாள் காலை வழக்கம் போல் டிரஸ்ட் சார்பாக ஸ்ரீ அகோராஸ்த்ர ஹோமத்துடன், ருத்ராபிஷேகம் **சிவஸ்ரீ குரு** என்கிற **T.A. தட்சிணாமூர்த்தி சிவாச்சாரியார்** தலைமையில் நடைபெறும்.

## வேதபாராயணம் மகாருத்ரம் / ஸ்ரீமத் ராமாயணம்

## தோராயமான செலவு விவரங்கள்

| சதுர் வேதபாராயணம் | வித்வான்கள் |
|---|---|
| யஜுர் வேதம் | 20 |
| ருக்வேதம், ஸாமவேதம், சுக்ல யஜுர்வேதம், அதர்வன வேதம் | 10 |
| மகாருத்ரம் | 14 |
| ஸ்ரீமத் ராமாயணம் | 24 |
| நாமசங்கீர்த்தனம் - பாகவதாள் | 16 |
| இஷ்டி | 7 |
| இதர பாராயணம் | 10 |
| மொத்தம் | 101 |

| தோராய செலவு விவரங்கள் | ரூ. |
|---|---|
| சதுர்வேதபாராயணம், ஸ்ரீமத் ராமாயணம் மஹாருத்ரம் (ஜபம் ஹோமங்கள்) மற்றும் இதர பாராயணங்கள் விசேஷ ஹோமங்கள், வேத பரீட்சை மற்றும் இதர செலவுகள் | 50 லட்சம் |
| ஸந்தர்பனை, சமையல் கைங்கர்யம் சத்திர வாடகை மற்றும் இதர செலவுகள் | 60 லட்சம் |
| இரயில் மற்றும் போக்குவரத்து பத்திரிகை அச்சிடுதல், பிரஸாதம் அனுப்புதல், கொரியர், போஸ்ட் மற்றும் நிர்வாக செலவுகள் | 20 லட்சம் |
| மொத்தம் | 130 இலட்சம் |

வழக்கம் போலவே சதுர்வேதபாராயணம், மஹாருத்ரம் யக்ஞம், விசேஷ ஹோமங்கள் மற்றும் ஸ்ரீமத் ராமாயணம் 100 கணக்கான வேத வித்வான்களுக்கு, சம்பாவனைகள் சமாரதனை மற்றும் பொது அன்னதானம் செய்வதற்கும் மேற்படி செலவு விவரங்கள் கூறியபடி பல லட்சக்கணக்கில் தேவைப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் ஆக்கமும் திரவியம் அனைத்தும் அளித்து 11 நாட்கள் சதுர்வேத பாராயணம், மகாருத்ர யக்ஞம் மிக சிறப்பாக நடத்தி கொடுக்கும் அனைத்து ஆஸ்தீக அன்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். மற்றும் தங்களுடைய சக்திக்கேற்ப பொருளுதவி செய்து அது சமயம் வேத அபிமானிகள் யாவரும் இந்த ராமஜன்ம பூமி மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ அகோரமூர்த்தி, ஸ்ரீ ராமபிரான், பகவத் அனுக்கிரகத்திற்கும் ஸ்ரீ வேதவியாஸ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாள் மற்றும் ஸ்ரீ மகான்களின் அனுக்கிரஹத்திற்கும் பாத்திரராகும்படி ப்ரார்த்தித்துக் கொள்கிறோம்.

## நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**T.S.G.V.R. TRUST,**

**P1, 31, Door No. 14, Vivekananda Street, Nilamanai Nagar, Adambakkam, Chennai - 88.**

**For Income Tax Exemption T.S.G.V. Trust only and not TSGVR Trust**

**Once you Transfer the amount through GPAY, Please Send your full name, full address & mobile No. We will be able to send receipt, Prasadhams only, if you send your full address to the Whatsapp No. 99 62 57 07 73**

TSGV Trust
IT EXEMPTION
(PAN No.Compulsory)

TSGV Religious Trust
NO IT EXEMPTION

இப்படிக்கு

மேனேஜிங் டிரஸ்டி
வேதகைங்கர்யமணி, தர்மபுத்ரன்,
வேதகைங்கர்ய சிரோமணி, பாரதிபுரஸ்கார்,
வேதஸாரதி, வேதபாராயண ஜோதிர்
இந்திரன் ஸ்வாமிகள் தர்ம பிரசார சிரோமணி
**S. சந்திரன்**

டிரஸ்டிகள்
**R. குப்புஸ்வாமி,** Advocate, Mylapore
**G.V. அருண் (S/o.) G. வேதகிரி,** மயிலாப்பூர்
**S. சங்கரன்,** ஆதம்பாக்கம்.
**C. சிவகுமார்,** சென்னை. **V. ராமநாதன்,** ஆதம்பாக்கம்
**V. பாலசுப்ரமணியன்,** நங்கநல்லூர்

**Co-ordinators**
கோமல் **S. வெங்கட்ராம சாஸ்திரிகள்.**
வடகுடி **T. சங்கரராம தீக்ஷிதர்,**
செதலபதி **V. ஸுப்ரமண்ய கனபாடிகள்,**
**S. கிருஷ்ணமூர்த்தி (எ) பாபு,** திருஇந்தளூர் மாயவரம்
**S. நடராஜ ஸர்மா,**
**C.S.R. கண்ணன்**

தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்

வேதவித்வான்கள், மேனேஜிங் டிரஸ்டி, டிரஸ்டிகள், அங்கத்தினர்கள் மற்றும்
**ஸ்ரீ V.S.சுப்ரமண்யம்,** ஸ்ரீ காஞ்சி சங்கர மடம், மேனேஜர், வாரணாசி
ஸ்வாமிமலை - **ஸ்ரீ ஸ்வாமிநாத ஸர்மா (எ) சிவகுமார்,** வாரணாசி
ஸ்வாமிமலை - **வெங்கட்ரமண கனபாடிகள்,** வாரணாசி

கேம்ப்ரோடு பாக்கியம் பிரஸ் : 9025199081